செய்தி வெளியீடு எண்: 19 நாள்: 10.07.2017

**தேனி மாவட்டம்,**
**மகளிர் திட்டத்தின் சார்பில்**
**பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மகளிர் திட்டத்தின் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு) சார்பில் இன்று (10.07.2017) நடைபெற்ற நிகழ்ச்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டம் - திட்ட வாழ்க்கை திட்டத்தின் கீழ் தையல், கணினி, மின் (Electrician) பணியாளர் பயிற்சி பெற்ற 250 நபர்களுக்கு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாவட்டத்தில் 2014-15 மற்றும் 2015-16-ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் 15 நாட்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட நாட்களில் பணிமுடித்த குடும்பங்களைச் சார்ந்த நபர்களை தேர்வு செய்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டம் - திட்ட வாழ்க்கை திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயராம் கல்வி அறக்கட்டளை மூலம் 120 நபர்களுக்கும், சோசியல் மாஸ் சர்வீஸ் டிரஸ்ட் மூலம் 25 நபர்களுக்கும், கவிதாலாய சரவணன் கல்வி அறக்கட்டளை மூலம் 25 நபர்களுக்கும், ஸ்ரீமாருதி அறக்கட்டளை மூலம் 25 நபர்களுக்கும், KI Infitech Services PVT Ltd மூலம் 30 நபர்களுக்கும், அமிர்தா அறக்கட்டளை மூலம் 25 நபர்களுக்கும் என மொத்தம் 250 நபர்களுக்கு தையல், கணினி, மின் (Electrician) பணியாளர் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள் பெற்ற பயிற்சியினை கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாண் சுந்தரம் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், உதவித்திட்ட அலுவலர்கள் திரு.செல்வராஜ் அவர்கள், திரு.தங்கபாண்டி அவர்கள், திரு.முருகேசன் அவர்கள், கவிதாலாயா சரவணன் கல்வி அறக்கட்டளை நிறுவனர் திருமதி.கவிதா அவர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக்குழுவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**